(ஆ) தஞ்சை மாவட்டத்தில் தேசிய யானைக்கால் தடுப்புத் திட்டத்தின் கீழும், கொசு தடுப்புத்திட்டத்தின் கீழும் இருபது இடங்களில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(1) கொசுப்புழு பெருக்கத்தைத்தடுக்க கொசுப்புழு தடுப்பு எண்ணெய் (Mosquito Laroicidal oil) தெளித்தல்.

(2) நோயின் தன்மை கண்டறிய தாக்குண்டவர்களின் இரத்தத்திவிலைகள் சேகரித்து ஆய்வு செய்தல்.

(3) பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதோடல்லாமல் மற்றவர்களுக்கு இந்நோய் பரவாமல் தடுத்தல்.

கோவை மாவட்டம் யானைக்கால் நோய் பரவும் பகுதி யில்லை. ஆகையால் யானைக்கால் நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும் பிரச்சினை இல்லை.

(இ) அய்யப்பாட்டிற்குரிய பகுதிகளில் பூச்சியியல் வல்லுனர்களால் ஒரு விரிவான கணிப்பு (Survey) செய்யப்பட்டு, அங்கு யானைக்கால் நோய் பரப்பும் கொசுக்கள் உள்ளதா, அப்படியாயின் அக்கொசுக்களின் அடர்த்தி எவ்வளவு என்று அறியப்படும். நோயின் விகிதம் அய்ந்து அளவு விழுக்காட்டிற்கு மேலும் பாதிக்கப்பட்ட பகுதியின் மக்கள் தொகை 20,000க்கு மேற்பட்டால், அங்கு தேசிய யானைக்கால் தடுப்புத்திட்டம் நிறைவேற்றப்படும். மற்ற பகுதிகளில் சாதாரண கொசு தடுப்புத்திட்டம் உள்ளாட்சிகளால் நிறைவேற்றப்படும்.

(ஈ) தற்போது யானைக்கால் வியாதியினால் பாதிக்கப்பட்டு, கால் பெரியதாக வீங்கியவர்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் அதிகப்படியான சதைகளையும், சதை திசுக்களையும் நீக்குவதைத் தவிர, வேறு சிகிச்சை முறைகள் இல்லை. இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டோர் இதற்காக அரசு மருத்துவ மனைகளை நாடலாம். இந்த வியாதிக்கு ஒரு தீவிரமான சிகிச்சை முறைக்கான உயர்மட்டத்தில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

இணைப்பு IV.

[180ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா 204-க் கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

சென்ற ஆண்டு பயிற்சி மருத்துவர் மற்றும் பிறர் வேலை நிறுத்தத்தின் போது மருத்துவமனைப் பணிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் பயிற்சி பெறா

1980 பிப்ரவரி 11]

மருத்துவர்களை பணிபுரிய அனுமதிக்காமல் இருக்க வேண்டு மெனவும், மருத்துவப் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட வேண்டுமெனவும், மத்திய அரசு கொடுக்கும் தொகைக்கு சமமாக பயிற்சி மருத்துவர் மேற்பட்டப் படிப்பு மாணவர்கள் முதலியவர்களுக்கு மாதாந்திர உதவிப் பணம் வழங்கு தல் வேண்டும் என்பன அவர்களுடைய கோரிக்கைகள்.

இக்கோரிக்கைகளை ஆய்ந்து அரசு கீழ்க்கண்ட ஆணை பிறப்பித்துள்ளது, இந்த ஆணை 1—4—1978 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

1. பயிற்சி மருத்துவர்கள் (Compulsory Rntatory Ioternees) மாதாந்திர உதவித் தொகை ரூ. 275-ல் இருந்து ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு சாப்பாட்டு ஈட்டுத் தொகையாக ரூ. 25-ம் அளிக்கப்படுகிறது.

2. ரெசிடென்சி இன்டர்னிகளுக்கும் மாதாந்திர உதவித் தொகை ரூ. 200-ல் இருந்து ரூ. 325 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

3. முதுநிலை பயிற்சி மருத்துவர்களுக்கும் (Senio House Surgeons) உதவித் தொகை ரூ. 325 மாதந் தோறும் வழங்கப்படும். இவர்களுக்கும் மற்ற படிகள் ஏதும் கிடையாது.

4. மேற்பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும் கீழ்க் கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படும் :—

(அ) பணியில் உள்ள 5 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்த (தகுதிகான் பருவத்தை முடித்தவர்) மாணவர்களுக்கு ரூ. 650 வீதம் உதவிப் பணம் அதிகபட்சமாக 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

(ஆ) 5 வருடங்களுக்கு குறைவாக பணி புரிந்தவர்களுக்கு (தகுதிகான் பருவத்தை முடித்தவர்கள்) மாத உதவித் தொகை யாக ரூ. 550 வீதம் அதிகபட்சம் 24 மாதங்களுக்கு வழங்கப் படும். மேற்கண்ட மாணவர்களுக்கு படிப்பு சம்பந்தமாக விடுப்பு கிடையாது.

(இ) பணியில் இல்லாத மேற்பட்ட படிப்பு மற்றும் தகுதிப் பட்டயப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 325 வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

(ஈ) உதவித் தொகையை பெறும் எல்லா மருத்துவர் களும் 5 வருடம் கிராமப்புறங்களில் பணி செய்வதாக ஒரு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.